

நாகப்பட்டினம் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக சென்னையிலிருந்து விமானம் மூலம் திருச்சிராப்பள்ளி விமான நிலையத்திற்கு நேற்று முன்தினம் (02.03.2025) வருகை தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பொன்னாடை வழங்கி வரவேற்றார்.

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள்:

# கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் கிரிக்கெட் போட்டி!

### மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. பரிசு வழங்கினார்!

கிருஷ்ணகிரி, மார்ச் 4 -

கழகத் தலைவர், தமிழக முதல்வர் பிறந்தநாள் விழாவையொட்டி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் நடைபெற்ற மாபெரும் கிரிக்கெட் போட்டிகளை மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்து, வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகளை வழங்கினார்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் 72 வது பிறந்த நாளையொட்டி கிருஷ்ண கிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக மார்ச் 1ம் தேதி முதல் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக கிருஷ்ணகிரி அரசு ஆடவர் கலைக் கல்லூரி மைதானத்தில் கிரிக்கெட் போட்டிகள் நடந்தப்பட்டது.. மைதானத்தில் மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் 42 ஆண், பெண்கள் அணிகள் கலந்து கொண்டன.

போட்டியை துவக்கி வைத்த கிருஷ்ண கிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் பேசுகையில்,

மற்ற மாநிலங்கள் வியந்து பார்க்கும் வகையில் ஆட்சி நடத்திவரும் தமிழக முதல்வர் தளபதியார் அவர்களது பிறந்த நாளையொட்டி கிரிக்கெட் போட்டிகள் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக நடத்தப்படுகிறது. தமிழக முதல்வர் தன் பிறந்தநாள் செய்தியாக "ஒரே இலக்கு தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்"என்ற உறுதி மொழியை கூறி தாய் மொழி கல்வி குறித்து அறைகூவல் விடுத்துள்ளதை சுட்டிக்காட்டி பேசினார். தொடர்ந்து 'ஒரே இலக்கு தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் என்ற உறுதிமொழி ஏற்புக்கு பின்னர் போட்டிகள் துவங்கின. போட்டிகளில் வெற்றிபெற்ற கிருஷ்ணகிரி கிழக்கு நகர அணிக்குமுதல் பரிசாக 33,000 ரூபாய் வழங்கப்பட்டது இரண்டாம் பரிசாக கிருஷ்ணகிரி மேற்கு ஒன்றிய அணிக்கு 22,000 ரூபாயும், கிருஷ்ண கிரி மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அணிக்கு மூன்றாம் பரிசாக 11,000 ரூபாயும், மாவட்ட மகளிர் அணி, மாவட்ட மகளிர் தொண்டரணி, காவேரிபட்டினம் கிழக்கு ஒன்றிய அணி, மாவட்ட தொழிலாளர் அணி உள்ளிட்ட அணிகளுக்கு தலா 11,000 ரூபாய் ரொக்க பரிசுகளை மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம் எல் ஏ வழங்கினார்.

இந்த நிகழ்சியல் மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், மாநில விவசாய அணி துணை செயலாளர் வெங்கடேசன், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் சீனிவாசன், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சந்திரன், சாவித்தி கடலரசு மூர்த்தி, பொருளாளர் கதிரவன் , தலைமை செயற்குழு உறுப்பினர் செந்தில், கிருபாகரன் பொதுக்குழு உறுப்பினர்கள் நாகராசன் , கோதண்டன் சித்ரா சந்திரசேகர்,

கிருஷ்ணகிரி கிழக்கு மேற்கு நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம் ,வேல்மணி, ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன், தேங்காய் சுப்பிரமணி , மகேந்திரன், சாந்தமூர்த்தி, அறிஞர், ராஜேந்திரன், நரசிம்மன், குண. வசந்த்ரசு, ரஜினி செல்வம், எக்கூர் செல்வம், குமரேசன் பேரூர் கழக செயலாளர்கள் தம்பிதுரை, வெங்கடப்பன், பேரூர் கழக பொறுப்பாளர்கள் பார்த்திபன், சாஜித், மற்றும் அன்பரசன் உள்ளிட்ட ஏராளமான தி.மு.க., நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், விளையாட்டு வீரர், வீராங்கனை கள் உள்பட பலர் கலந்து கொண்டனர் .



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி பிறந்த நாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் அப்பம சமுத்திரம் ஊராட்சியில் கழக இரு வண்ண கொடியேற்றி தமிழ்நாட்டை காப்போம் என்று உறுதி மொழி எடுத்துக் கொண்டனர் . பின்னர் அன்னதானத்தை ஆத்தூர் ஒன்றியக் கழகச் செயலாளர் டாக்டர் வே.செழியன் வழங்கினார். அப்போது பெரியசாமி, பத்திரம் மனோகரன், மாது, சுரேஷ், ரங்கநாதன், கவிதா, துரைசாமி, ராம்குமார், சங்கீத், ராமதாஸ், தினேஷ், மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ப.சீ. கிருஷ்ணசாமி

**மார்ச் 4 (2001)**



பெரியார் மாவட்டக் கழக பொறுப்பாளர்களில் ஒருவராகவும், பவானி நகரக் கழக செயலாளராகவும் தொடர்ந்து 25 ஆண்டுகள் பணியாற்றியவர்.

ஈரோடு மாவட்ட கூட்டுறவு ஒன்றியத் தலைவராகவும், நகர வங்கித் தலைவராகவும் பணியாற்றியவர்.

மொழிப்போர் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

"உயிர் கொள்கைக்கு உடல் மண்ணிற்கு என்று நீ கொண்டிருந்த உறுதியும், எதற்கும் கலங்காத உன் உள்ளமும் என் நினைவிலிருந்து என்றைக்கும் மறையாது!" எனத் தலைவர் கலைஞரால் புகழப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் ஒன்றியம் ஆடுதுறை பேரூராட்சி வீரசோழன் திருமண மண்டபத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில் சமுதாய வளைகாப்பு விழாவினை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் துவக்கி வைத்து வளைகாப்பு சீர்வரிசைப் பொருட்களை கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கினார். மாவட்ட ஆட்சித் தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன், கும்பகோணம் சார் ஆட்சியர் ஹிருத்யா எஸ்.விஜயன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், உதவி ஆட்சியர் பயிற்சி உதகரஷ் குமார், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் கை.ராஜேஸ்வரி மற்றும் பலர் உடன் உள்ளனர்

## டாக்டர் கலாநிதி வீராசாமி – புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா வழிகாட்டுதல்படி

# குவைத் தி.மு.க. அயலக அணி சார்பில் - கழகத் தலைவர் பிறந்தநாள் விழா!

### சிதம்பரம் ந.தியாகராஜன் ஒருங்கிணைப்பு! புதூர் உத்தமனூர் ஜலீல் முஸ்தபா தலைமை!

குவைத், மார்ச் 4 -

குவைத் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக அயலக அணி சார்பில் கழக தலைவரும், தமிழ்நாடு முதல மைச்சருமான மு.க.ஸ்டா லின் அவர்களின் 72வது பிறந்தநாள் விழா மிக எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது.

தி.மு.கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாள் உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் மிகுந்த எழுச்சியுடன் கொண்டாடி வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக குவைத் நாட்டில் தி.மு.கழக அயலக அணி குவைத் மண்டலத்தின் சார்பாக, கழக அயலக அணி தலைவர் டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி மற்றும் செயலாளர் புதுக் கோட்டை எம்.எம்.அப்துல்லா எம்.பி ஆகியோரின் வழிகாட்டுதலின்படி தி.மு.கழக அயலக அணி குவைத் நாட்டின் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் ஒருங்கிணைப்பில், மண்டல அமைப்பின் செயலாளர் புதூர் உத்தமனூர் ஜலில் முஸ்தபா தலைமையில், சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் அமைப்பின் இணைச் செயலாளர்கள் ஆயங்குடி ஜெ.சையது முஸ்தபா, குடந்தை சி.தியாக ராஜன், சேகரை வெ.செல்லதுரை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அமைப்பின் பொருளாளர் புதுவை அ.அறிவுமணி வரவேற்புரை ஆற்றினார்.

அமைப்பின் துணைச் செயலாளர் முத்துப்பேட்டை ம.சபரிவாசன், இளைஞரணி செயலாளர் உளுந்தூர் பேட்டை சு.வெங்கடேசன், மகளிரணி செயலாளர் தஞ்சை சாந்தி பாலசுப்ரமணியன், விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் பரங்கிப் பேட்டை ம.நசுரு தீன் முகம்மது, பொறியாளர் அணி துணைச் செயலாளர் மருதூர் பிரேம்குமார், மகளிர் அணி துணைச் செயலாளர் திருவாரூர் கனிமொழி கார்த்திகேயன், திமுக கழக முன்னோடி நாசர் சலாவுதீன், எழுத்தாளர் நிர்மலா தேவி தமிழரசன், கவிஞர் கமருதீன், கல்ப் ஸ்பிக் சலீம், அலி மேன்பவர் சப்ளை நிறுவனர் அலிபாய், மற்றும் குவைத் தளபதி பேரவை, வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் நலச்சங்கம், தமிழ் மக்கள் சேவை மையம், குவைத் தமிழ் ஒட்டுநர் சேவை மையம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், விடுதலை சிறுத்தைகள் கட்சி, தமிழர் வாழ்வுரிமை இயக்கம், கலகலப்பு நண்பர்கள் குழு, நந்தவனம், தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம், மனிதநேய ஜனநாயக கட்சி, தமிழர்கள் ஒட்டுநர் சேவை மையம் மற்றும் பல தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளும் தி.மு.கழக நிர்வாகிகளும் வாழ்த்துரை வழங்கினர். ஒவ்வொருவரும் தங்களின் வாழ்த்துரையில் அப்பாவுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள் என அன்போடு கூறி மகிழ்ந்தனர்.

2026 இல் இருநூறு தொகுதியை வென்றிட களப்பணி ஆற்றுவோம் என்றும், அனைத்து புலம்பெயர் தமிழர்களும் வாக்களிக்க தமிழ்நாடு செல்லும் வகையில் அவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவோம் என்றும் உறுதிமொழி ஏற்கப்பட்டது.

இந்நிகழ்வில் அமைப்பின் நிர்வாகிகள் திருவாரூர் ச. குமார், விழுப்புரம் ஐ.ஜஹாங்கீர், உளுந்தூர்பேட்டை மு. நஜிர் அகமது, மேட்டுவிளை ஐ.ஜானவாஸ், தானிப்பாடி சே.அஸ்ரப் அலி, திருக்கோவிலூர் அ.பொன்முடி, கூத்தாநல்லூர் ஏ.ஷாகுல் ஹமீது, திருச்சி ஏ.ஜெ.எம்.இஷாக் ஜக்கரியா, தக்கலை ஜோசப் பெர்லின், குடந்தை த.மணிகண்டன், இராதாபுரம் அஜிஜுல்லா, நாராயணகுப்பம் சையத் துராப்ஜான்,

லட்சுமாங்குடி பி.ஆர். பழனி, மயிலாடுதுறை ராஜலட்சுமி பாபு, கள்ளக்குறிச்சி மதியழகன், புதுக் கோட்டை அசாருதீன், இராமநாதபுரம் முகம்மது பைசான் அலி (இராமநாதபுரம் பைசான்), திருபுவனம் ஹ.மைதீன் பாட்சா, விழுப்புரம் பா.அய்யனார், கொள்ளிடம் காவேரி செல்வம், உடையார்பாளையம் செந்தில்குமார், நெய்வேலி கோபாலகிருஷ்ண, ஆயங்குடி சையது ரகுமான், அணைக்காடு ரோம்லஸ் தேவசகாயம், கன்னியாகுமரி ராஜேஷ், மங்கலம்பேட்டை

ஜெ.சாஜிதீன், கன்னியாகுமரி ஜோசப் எடிசன், பரங்கிப் பேட்டை எஸ்.முகமது உசேன், நாராயண குப்பம் சதாம் உசேன், கொரடாச்சேரி காளிமுத்து, முகம்மது, புலியூர் குமார், தஞ்சை ரா.ராஜ ராஜன், தக்கலை தனுஷ் ராஜா, ஆத்தூர் ஜான் பாட்ஷா, கோட்டை பி.மோதிலால்,

பரமக்குடி பி.மோகன், திருவாரூர் திருவரங்கன், லட்சுமாங்குடி சசிகுமார், நெல்லை வில்சன், உளுந்தூர்பேட்டை சுப்பிர மணியன், குடந்தை ஆர்.முருகன், வடமாமாந்துர் தக்கா பா.நஜீர், நாராயணகுப்பம் ஷேக்ஆலம், கள்ளக்குறிச்சி பெ.சின்னசாமி ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் கூடியிருந்த அனைவரும் ஒன்று கூடி தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்! எனும் முழக்கத்தை விண்ணதிர முழங்கினர்.

அமைப்பின் துணைப் பொருளாளர் திருவடத்த னூர் ஏ.எஸ்.முஹம்மத் ரபீக் நன்றி கூறினார்.

## கழகத் தலைவர் – முதல்வர் பிறந்தநாளை – தமிழர் எழுச்சி நாளாக

# கழக மீனவர் அணி சார்பில் நல உதவிகள் வழங்கிக் கொண்டாடுவோம்!

### அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 4 -

முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்களின் பிறந்நாள் தமிழர் எழுச்சி நாளாக கழக மீனவர் அணியினர் நல உதவிகள் வழங்கி மாநிலம் முழுவதும் கொண்டாடுவோம் என தி.மு.க. மீனவர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்நிறைவேற்றப்பட்டது.

தி.மு.க. மாநில நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம் 27.02.2025 அன்று காலை 10 மணியளவில் திருவெற்றியூர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. இல்லத்தில் மாநில துணைத் தலைவர்கள் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., இரா.மதிவாணன் ஆகியோர் முன்னிலையில் மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாநிலத் துணை செயலாளர்கள் வீ.பி. பொன்னரசு, மு.தம்பித்துரை, ஜி. மனோகரன், க.எரிக் ஜீடு, வக.ஜெயபிரகாஷ், சி. புளோரன்ஸ், ஆர். பத்மநாபன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

மார்ச் 1ல் 72வது பிறந்த நாள் விழா காணும் முதலமைச்சர் கழகத்தலைவர் தேசம் வியக்கும் திராவிட நாயகர் முக. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை கழக மீனவர் அணியினர் மாவட்டம், மாநகரம், ஒன்றியம், நகர பகுதிகளிலும், மீனவ கிராமங்கள் தோறும் கழகக் கொடி ஏற்றி, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி, நலத்திட்ட உதவிகள் செய்து கொண்டாடவும், மார்ச் மாதம் முழுவதும் மீனவர்களுக்கு படகு போட்டிகள், விளையாட்டு போட்டிகள், பள்ளி குழந்தைகளுக்கு நோட்டுப் புத்தகங்கள், விளையாட்டு உபகரணங்கள் நலிந்த மீனவர்களுக்கு உதவிகள் வழங்கி கொண்டாட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முதலமைச்சர் கழகத்தலைவர் மீனவர் நலன்காக்கும் திராவிட நாயகர் அவர்கள் மீனவர் நலன் சார்ந்து வழங்கிய பல்வேறு நல திட்டங்களுக்காகவும் குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டம் நீரோடி முதல் பழவேற்காடு வரை உள்ள மீனவ கிராமங்களை இயற்கை சீற்றங்களில் இருந்தும் கடல் அரிப்பு, போன்ற மீனவர்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு உறுதுணையாக, தூண்டில் வளைவுகள் மீன்பிடி இறங்கு தளங்கள் துறைமுகங் கள் என தமிழ்நாடு அரசின் சொந்த நிதியிலிருந்து ரூபாய் ஆயிரம் கோடி அளவிற்கு திட்டங்கள் நிறைவேற்றி தந்தமைக்காகவும் கழக மீனவர் அணி சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்நாட்டிலிருந்து வெளிநாட்டிற்கு மீன்பிடி தொழிலுக்கு செல்லும் மீனவர்கள் கடலில் எதிர்நாட்டு கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் வாடிய மீனவர்களை மீட்பதற்கும் அவர்களின் உரிமைகளுக்காகவும் கழகத்தின் சார்பில் அயலக அணியை உருவாக்கி மீனவர்களை பாதுகாப்பாக தமிழ்நாட்டிற்கு மீட்டு அழைத்து வந்தற்காக நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

**மீனவர் நலன் சார்ந்த முத்தான திட்டங்கள்!**

இராமேஸ்வரத்தில் நடைபெற்ற மீனவர் நல மாநாட்டில் கலந்துகொண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இதுவரை எந்த முதல்வரும் செய்திராத வகையில் அந்த மாநாட்டில் 1000 கோடி ரூபாய் அளவில் மீனவர் நலன் சார்ந்த முத்தான 10 நலத்திட்டங்களை அறிவித்து அதை நிறைவேற்றி தந்தமைக் காவும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த 18.02.2025 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற மீனவர்கள் நன்றி தெரிவிக்கும் நிகழ்வில் இராமேஸ்வரம் மீனவர்கள் வைத்த கோரிக்கைகளை உடனடியாக பரிசீலனை செய்து ரூபாய் 360 கோடி நிதியை ஒதுகீடு செய்து நிறைவேற்றி தந்த மீனவர்க ளின் காவலர் முதலமைச்சர் - தலைவர் மு.க. ஸ்டா லின் அவர்களுக்கு நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.

பேரறிஞர் அண்ணா அவர்களால் சிந்தனை சிற்பி சிங்காரவேலர் அவர்கள் மறைக்கப்பட்ட மாமேதை எனவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் சென்னையில் சிந்தனை சிற்பி சிங்கார வேலர் மாளிகை திறக்க ப்பட்டதும் சிங்கார வேலர் பெயரில் மீனவர் தொகுப்பு வீடுகள் திட்டம் தந்தது என என்றும் தி.மு.கழகத்தால் போற்றப்படும் சிந்தனை சிற்பி சிங்கார வேலருக்கு மேலும் மகுடமாக சென்னையில் சிங்கார வேலர் நினைவிடம் உள்ள லேடி லெவிங்டன் பள்ளியின் பெயரை சிந்தனை சிற்பி சிங்கார வேலர் பள்ளி என பெயர் மாற்றம் செய்திட வேண்டும் என்று தமிழ்நாட்டில் உள்ள மீனவர் நலச்சங்களின் கோரிக்கையை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கனிவுடன் ஆய்வு செய்திட வேண்டும் என கழக மீனவர் அணி சார்பாக கோரிக்கை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னை உள்ளிட்ட தமிழ்நாடு முழுவதும் வரலாறு காணாத கனமழையால் தத்தளித்தபோதும், புயலால் சேதமடைந்த பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று மக்களோடு மக்களாக நின்று அவர்களின் தேவைகளை போர்கால அடிப்படையில் நிறைவேற்றி தந்து நிவாரணம் அறிவித்து அவர்கள் துயரத்தில் துணை நின்ற தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், அல்லும் பகலும் கொட்டும் மழையிலும் மக்கள் குறை தீர்க்க களத்தில் நின்ற தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் கழக மீனவர் அணி சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

**ஒன்றிய அரசின் தீய எண்ணம்!**

இந்தி திணிப்பை என்றும் எதிர்ப்போம். தமிழ்நாடு அரசுப் பள்ளிகளில் இருமொழிக் கொள்கையில் பயின்று, உலகத்தரத்திற்கு உயர்ந்த பல்லாயிரம் சாதனையாளர்களை பட்டியலிடலாம். தற்போதைய காலகட்டத்தில் பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகளுக்கு பெரும் சவாலாக உள்ள புத்தகச் சுமைகளை குறைப்பது எப்படி என்று பெற்றோர்கள் சிந்திக்கும் வேளையில் கணக்கு, அறிவியல் போன்ற பாடங்களில் உள்ள கடினத் தன்மையை, பெரும் சவாலாக எடுத்து தினமும் நமது மாணவச் செல்வங்கள் கல்வி பயின்று வரும் நிலையில், கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் மிக மிக தாழ்ந்த நிலையில் உள்ள மீனவர் சமுதாய இளம் தலைமுறையினர் பாரம்பரியமான மீன்பிடி தொழிலை விட்டு, உயர்படிப்புகள் படித்து முன்னேறி வேலை வாய்ப்புகளை பெற வேண்டும் என முயன்று முன்னேறும், வேளையில், இந்தி என்ற மூன்றாவது மொழியை திணித்து வட நாட்டவர் வாழ, தமிழ்நாட்டவர் வேலை வாய்ப்பை பெற முடியாமல் தடுக்கும் ஒன்றிய அரசின் தீய எண்ணத்தால், அதிகார ஆணவத் திமிரோடு கொண்டுவரத் துடிக்கும் மும்மொழி கொள்கையை, கட்டாய இந்தி திணிப்பை தமிழ்நாட்டு மீனவ மக்களும் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை மேலும் இன்னொரு மொழிப்போரை தமிழர்கள் மீது திணிக்க வேண்டாம் எனவும் ஒன்றிய கல்வி அமைச்சருக்கும், ஒன்றிய அரசுக்கும் கழக மீனவர் அணி சார்பாக கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம் என ஏகமனதாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்ட மீனவரணி நிர்வாகிகள்: கே.தேசிங்கு து.அல்லிமுத்து இரா.பிரகாஷ் எம்.எல்.வேலன், எஸ்.செல்வம், டி.மகேந்திரன், ஆர்.குமரன், வி.ரமேஷ் எஸ்.கே.இளங்கோ, ஏ.சுரேஷ், நல்லதம்பி, மதிவாணன், கிருபானந்தம், என். சண்முகம், குமரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கடலூரில் அனைத்து குடியிருப்போர் நலச் சங்கங்களின் கூட்டமைப்பு மற்றும் தனியார் மருத்துவமனை சார்பில் இலவச பொது மருத்துவ முகாம் நடைபெற்றது. முகாமிற்கு கூட்டமைப்பு தலைவர் பச்சையப்பன் தலைமை தாங்கினார். சிறப்பு தலைவர் மருதவாணன், துணைத் தலைவர் ரங்கநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொதுச் செயலாளர் வெங்கடேசன் வரவேற்றார். முகாமில் அய்யப்பன் எம்.எல்.ஏ. சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மருத்துவ முகாமை தொடங்கி வைத்தார். மாநகராட்சி துணை மேயர் தாமரைச்செல்வன், தாசில்தார் பலராமன் ஆகியோர் வாழ்த்துரை ஆற்றினார்கள். இதில் கூட்டுறவு சங்க தலைவர் ஆதி பெருமாள், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சுதாகர், சங்கத் தலைவர் ஜெகநாதன், பொருளாளர் குமார், கூட்டமைப்பு இணைச் செயலாளர் தேவநாதன், ஊராட்சி செயலாளர் வேலவன், வத்சலா ரமணி உட்பட கலந்து கொண்டனர். முடிவில் பொருளாளர் வெங்கட ரமணி நன்றி கூறினார்.